குழந்தைகள் 25 பேர், முதியவர்கள் 25 பேர் என்று தொண்டு நிறுவனங்களோடு இணைந்துதான் ஒருங்கிணைந்த வளாகங்கள் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன. அரசின் சார்பிலே நடத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துருவைப் பெற்று, அதற்குரிய நடவடிக்கையை எடுப்பது குறித்து அரசு ஆய்வு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

மகளிர் கலைக் கல்லூரி

***50259 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதியில் புதிதாக மகளிருக்கென்று தனியாக ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

2016 பிப்ரவரி 17]

திருமதி எஸ். கணிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிக் காட்டியவர் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உலகம் போற்றும் நல்லாட்சி தொடர, வருகின்ற சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி வாகை சூடும் எங்கள் பொன்மனத் தலைவி, தங்கத் தாரகை, புரட்சித்தலைவி அம்மா அவர்களை மீண்டும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் தொகுதியில் அரசுக் கல்லூரி ஏதும் இல்லை. ஏழையெளிய மாணவிகள் கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்றால் சுமார் 35 கிலோ மீட்டரில் உள்ள செங்கல்பட்டு அரசுக் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டியுள்ளது. என்னுடைய மதுராந்தகம் தொகுதி பின்தங்கிய சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதி. அத்தொகுதியில் சுமார் 11 அரசு மேல்நிலைப் பள்ளிகள் உள்ளன. அப்பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவிகளின் நலனைக் கருத்தில்கொண்டு, பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்ற நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் ஆட்சியில், மகளிர் கல்லூரி ஒன்று மதுராந்தகம் பகுதியில் அமைத்துத் தருவார்களா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 751 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு,

உத்திரமேரூரில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கியிருக்கிறார்கள். நெமிலியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை வழங்கியிருக்கிறார்கள். அப்படி தமிழகத்திலே எந்த மாவட்டத்திலும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி இல்லாத நிலையே இருக்கக்கூடாது என்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் இதுவரையில் இல்லாத அளவிற்கு தமிழகத்தில் 39 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கி தமிழகத்தில் அனைவரும் உயர் கல்வி பெறவேண்டும், குறிப்பாக மகளிர் உயர் கல்வி பெறவேண்டும், அதிலும் குறிப்பாக ஆதி திராவிட மாணவிகளும், மிகவும் பின்தங்கிய மாணவர்களும் உயர் கல்வி பெறவேண்டுமென்ற நோக்கத்தோடுதான் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் இதுபோன்ற அளவிற்கு மிகப் பெரிய அளவில் கல்லூரிகளை வழங்கி வருகிறார்கள். உறுப்பினருடைய பகுதியில் அதிகமாக மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. உயர் கல்வி பெறவேண்டுமென்று சொன்னால் குறைந்தது 35 கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்று படிக்க வேண்டியிருக்கிறது என்று சொல்லி ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் நம்முடைய இதயதெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று அதைப்பற்றி அரசு முடிவு செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூரில் நான் மகளிர் கல்லூரி கேட்டிருக்கிறேன். மீண்டும் அம்மா அவர்கள்தான் முதலமைச்சராக இருப்பார்கள். வருகின்ற காலத்தில் மகளிர் கலைக் கல்லூரி ஒன்று அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி தெரிவித்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 50, மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*